

# பரலோக பொக்கிஷங்கள்

**ஆவியானவர் நம்மீது தங்குவார்!** [யோவான் 1:33]



## அவர் ஜெயித்தார், நாமும் ஜெயிப்போம்!

இயேசு ஜெயமாய் உயிர்த்தெழுந்தார்! இன்றும் அவருக்கு சொந்தமானவர்களை, பிழைத்திடச் செய்யும்படிக்கு, நமக்காக அவர் உயிரோடு எழுந்து.... உங்களை திக்கற்றவர்களாக விடேன்! உங்களிடத்தில் வந்து, உங்களை நித்திய நித்தியமாய் பாதுகாத்து வாழ்வு தருவேன்! என்பதே அவர் தந்த ‘அழிவில்லா’ வாக்குதத்தம்! (யோவான் 14:18,19).

ஜெயித்து எழுந்தவர், நம்மை ஜெயமாய் நடத்துவார்!

*-tr*

பெட்டகம் 42
ஏப்ரல் 2026 பரல்கள் 04



## முன்பைவிட 'இப்போதே' சபை அதிக விழிப்பாயிருந்தல் வேண்டும்!

**ச**பைகள் யாதொரு குழப்பமின்றி, வேதத்திலும் கிறிஸ்துவிலும் பூரண நம்பிக்கை வைத்திருந்த காலத்தில், கிறிஸ்துவின் ஜீவியத்தை மென்மேலும் எழுதுவதே போதுமானதாயிருந்தது! ஆனால், தற்காலமோ அப்படிப்பட்டதன்று! வேத விரோதிகள் புறம்பேயிருந்து எதிர்த்த காலம்போக, சபைக்குள்ளிருக்கும் வேதபண்டிதர்களே (Bible Teachers) வேதத்தையும் கிறிஸ்துவையும் புரட்டத் துணிந்துள்ளார்கள். இவர்களின் தாறுமாறு கொள்கைகள், தேசமெங்கும் பரவியிருக்கின்றன! வேதசாஸ்திர கல்லூரிகளிலும் நுழைந்துள்ளன. போதகர்களும், வேதசாஸ்திர மாணாக்கரும் இதற்கு துணைபோகின்றனர்!

வேத சாஸ்திரிகள் தடம் புரண்டு செல்வதை எதிர்நிற்கக்கூடாமல், சாதாரண கிறிஸ்தவர்கள் தத்தளிக்கின்றனர். ஆதிப்பிதாக்களின் விசுவாசம், இன்றைய வேதபண்டிதமார்களுக்கு அறிவீனமாகத் தோன்றுகிறது. சகலமும் வேத அறிவின் ஆராய்ச்சியாயிருக்கிறதேயன்றி, விசுவாசத்துக்கு இடமில்லை!

தேவ வசனத்துக்கு ஒரு காலத்திலிருந்த மதிப்பும் பக்தியும் குறைந்துள்ளது. காரியங்கள் இவ்வாறிருக்க, சபைகளில் 'கிறிஸ்துவின் ஜீவனில்லாத' நிலைமையைக் குறித்து நாம் ஆச்சரியப்படுவானேன்? ஆகவே, இக்காலத்தின் நிலைமை அறிந்து கிறிஸ்தவனும், கிறிஸ்தவ சபையும் மிகுந்த விழிப்புடன் இருந்திட வேண்டியது அவசியமாயிருக்கிறது! *-Ed*


**2026 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா **ரூ.170**/- தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **ஏப்ரல் 20-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும்.நன்றி!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)
பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலம் **G-Pay** அனுப்பலாம்.



கடித தொடர்பு : **பரலோக பொக்கிஷங்கள்** 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall

## துன்பத்தில் அவர் தரும் சமாதானம், உலகத்தை ஜெயிக்கும்!

*அவரது சர்வ வல்ல ஆளுகையை நம்பியிருங்கள்*

**க**ர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்த ஒரு பெரிய மீன், *யோனாவை* விழுங்கிவிட்டது! அவ்வளவு பெரிய மீனுடைய இரைப்பை சுரப்பின் அமிலத்திற்குள் மூழ்கி, *யோனா* பெரும் அவஸ்தைக்குள்ளானான். அதுபோன்ற சூழ்நிலைக்குள் நீங்கள் அகப்பட்டுக் கொண்டால், நீங்கள் எவ்வாறு நடந்துகொள்வீர்கள்? "அநேகமாய், ஓ தேவனே நீர் எங்கேயிருக்கிறீர்? எனக்கு ஏன் இவ்வாறெல்லாம் நடக்கிறது?....." என பல வாசகங்களை கூறி, நீங்கள் மனவேதனை அடைந்திருக்கக்கூடும். ஆனால், இங்கு *யோனா* நடந்துகொண்ட விதமோ, மிகவும் ஆச்சரியமானது! அவன் தேவனை நோக்கி....

> *"**எ**ன் நெருக்கத்திலே நான் கர்த்தரை கூப்பிட்டேன், அவர் எனக்கு உத்தரவு அருளினார்.... ஆழி என்னைச் சூழ்ந்தது, கடற்பாசி என் தலையைச் சுற்றிக்கொண்டது.... என் ஆத்துமா என்னில் தொய்ந்து போகையில், கர்த்தரை நினைத்தேன். அப்பொழுது என் விண்ணப்பம் உமது பரிசுத்த ஆலயத்திலே உம்மிடத்தில் வந்து சேர்ந்தது. பொய்யான மாயையைப் பற்றிக் கொள்ளுகிறவர்கள் தேவனிடத்திலிருந்து வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள். நானோவெனில் துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன்,* ***இரட்சிப்பு கர்த்தருடையது**" என்றே வேண்டுதல் செய்தான் (யோனா 2:2-9).*

'தன் பெலவீனத்தில்' எவ்வளவுதான் *யோனா* தவறியிருந்தாலும், இந்த அவனுடைய ஜெபத்தில், ஒரு ஆவிக்குரிய ஸ்திர தன்மையைக் காண்கிறோம்! ஆம், தேவன் ஒருவரே அவனுக்கு உதவி செய்ய வல்லவர் என்ற **உறுதியான நம்பிக்கையை** தன் இருதயத்தில் வைத்திருந்தான்!

"
**நம் கிறிஸ்தவ ஜீவியத்தில் நாம் சந்திக்க வேண்டிய சவால் என்னவெனில், நமக்கு விரோதமான சூழ்நிலைகளை அகற்றுவது அல்ல! அதற்கு மாறாக, சர்வ வல்ல தேவனின் ஆளுகையை நம்பியிருப்பதேயாகும்!**

*அதாவது, அவர் ஒருவரே சர்வ ஞானமும்! சர்வ நன்மையும்! சர்வ வல்லமையும் நிறைந்து,* **ஆளுகை செய்பவர்** *என்பதை, துன்பமான சூழ்நிலைகளிலும் உணர்வதே ஆகும். அவ்வாறு, நீங்கள் சர்வ வல்ல தேவனுடைய ஆளுகையை விசுவாசிக்க கூடுமென்றால், துன்பமான ஒவ்வொரு சூழ்நிலையும், உங்களை பெலவீனப்படுத்தாமல், உறுதியான திடமனதை உங்களுக்கு கொண்டு வருவதை காண்பீர்கள்! அது எப்படியெனில்,* **உபத்திரவத்தின் சூழ்நிலையில் 'நாம் தேவனிடத்தில் சமாதானமாய் இருக்கும்' அமைதியை கண்டுகொண்டோம்** *என்பதே அந்த இரகசியமாகும்! இயேசு அந்த இரகசியத்தை கோடிட்டு காட்டி "என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்! உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும், திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" என்ற உற்சாகமான வாக்குதத்தத்தை தேவன் நமக்கு அருளியிருக்கிறார் (யோவான் 16:33).*

*இயேசுவின் சீஷர்களாகிய நாம், ஓர் தாறுமாறான சமாதானமற்ற உலகில் இருப்பதை அறிந்து, அவ்வித தாறுமாறுகளை அகற்ற வல்ல தேவன், கிறிஸ்து மூலமாய் நம்மில் கிரியை செய்கிறார் என்பதை நிச்சயமாய் அறிந்து வாழவேண்டும்! அவ்வாறு நாம் இருப்பதே, சர்வ வல்ல தேவனின் ஆளுகையை நம்பி வாழும் ஜீவியமாகும். அவருடைய பலத்த ஆளுகையை நம்பி, அவரிடம் நம்மை முழுவதும் ஒப்புவிக்கும் போது நடைபெறும் அற்புதமே "அவர் நமக்குத் தரும் சமாதானம்"*

"
**அதாவது, எந்த துன்ப நேரத்திலும் நமது உள்ளத்தில் அவர் தரும் மென்மையான அமைதி! அதுவே, நாம் உலகத்தை ஜெயித்திடும் ஜெயம்!**

***ஆ****கவேதான் ஒரு உண்மையான விசுவாசி, தேவன் ஆளுகை செய்யும் அவரது சர்வ வல்ல ஆளுகையை முழுமையாய் நம்பி ஒப்புக்கொடுத்து வாழ அவசியமாய் இருக்கிறது! அவரது ஆளுகையில் முழு நம்பிக்கை வைத்திட தவறும்போது 'தேவ சமாதானம்' நம்மைவிட்டு நீங்கிவிடும். அந்த நேரம் முதற்கொண்டு 'தேவ சமாதானத்தால் காக்கப்பட்டு வந்த நம் இருதயத்தில்' மீண்டுமாய் மனக்கலக்கம் துவங்கிவிடுகிறது. ஆனால் 'துன்ப நேரத்தில்' அல்லது புயல் வீசும் நேரத்தில், நம்முடைய இருதயம்*

*தேவ சமாதானத்தால் காக்கப்படுமென்றால் எவ்வித புயலிலும் "கர்த்தர் என்னை ஆளுகிறார்" என்ற விசுவாசம், மகிழ்ச்சியான ஜெயத்தை கொண்டுவந்து தரும்!*

விசுவாசிகளாகிய நாம் **'கவலைப்படும் பாவத்திலிருந்து'** விடுதலைப்பெற வேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது! மெய்யாகவே தன் ஜீவியத்தில் ஜெப வாழ்க்கையை ஆவலாய் கொண்டு வாழும் ஒரு கிறிஸ்தவனுக்கு, அதில் அவன் வளர்ந்து வரும்போது புதிதான ஜீவனும், புதிதான சிந்தையுடையவனாய் வாழ்வான் என்பது நிச்சயம்! ஆமென்.

*- ஜான் மேக் ஆர்தர்*

---

## அந்தரங்க ஜீவியமே, நம் நேசரின் விருப்பம்!

*புறம்பான கவர்ச்சியை, தேவன் ஏற்பதில்லை*

நீங்கள் உங்கள் வேதாகம அறிவை வைத்தும், வரங்களைக் கொண்டும் விசுவாசிகளுக்கு முன்பாக "கவர்ச்சியான தோற்றத்தை" காண்பித்துவிட முடியும்! அல்லது நீங்கள் கூட்டத்தில் பெருத்த "அல்லேலூயா" முழக்கங்களை முழக்கி, கூட்டத்தில் ஆவியின் அருள்மாரி, ஏராளம் இருப்பதுபோல் ஓர் தோற்றத்தையும் உண்டாக்கிட முடியும்! எதையும் சோதித்துப் பார்க்கத் தெரியாத ஜனங்களும் 'இதுபோன்றவைகளை' மெச்சிக்கொள்வதற்குத்தான் சிந்தை கொண்டிருக்கிறார்கள்!

ஆனால், பரிசுத்த ஆவியானவரோ சத்திய ஆவியானவர்... அவர் வெறும் தோற்றத்தைக் கண்டு ஏற்றுக்கொள்பவர் அல்ல! ஏனெனில், இன்று நடக்கும் ஏராளமான கூட்டங்களில் சத்திய ஆவியானவரின் பிரசன்னம் காணப்படவில்லை.... மாறாக, மனுஷீக உணர்ச்சி அலைகள்தான் தூண்டப்படுகின்றன, அது அத்தனையும் போலியானவைகள், ஆவிக்குரியவைகள் அல்ல!

இன்று எண்ணற்ற விசுவாசிகள், வெளியரங்க ஈர்ப்பில்தான் நாட்டம் கொண்டிருக்கிறார்கள். இவ்வித உலக கவர்ச்சியின் நாட்டம், இன்றைய சபைகளுக்குள்ளும் ஆழமாய் வந்து இறங்கிவிட்டதே! **நாமோ தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுகிறவர்களாகவே இருக்கவேண்டும்.** ஆனால் இன்றுள்ள சபைகளில், உயர்ந்த ஆடைகளையும், வெளியரங்க மேன்மைகளையும், தொழுதுகொள்ளும் ஜனங்களே ஏராளம் ஏராளமாய் இருக்கிறார்கள்! இவர்களைக் குறித்து ரோமர் முதலாம் அதிகாரத்தில் "சிருஷ்டிகரைத் தொழுதுகொள்ளாமல் சிருஷ்டியைத் தொழுதுகொள்பவர்கள்" என்றே

*கடிந்து எழுதப்பட்டுள்ளது! மெய்யாகவே, இன்றைய எண்ணற்ற விசுவாசிகள் இவ்வித அவலநிலையில்தான் இருக்கிறார்கள்!*

*ஏசாயா **2:12,16**-ம் வசனங்களில், "சேனைகளுடைய கர்த்தரின் நியாயத்தீர்ப்பு நாளானது..... எல்லா சித்திர விநோதங்கள் அதாவது* **தோற்றத்தில் அழகானவைகள்** *மேலும் வரும்" என காண்கிறோம். இன்று கிறிஸ்தவ ஊழியங்களிலும், இவ்வாறாகவே மனுஷர் பார்வைக்கு கவர்ச்சியூட்டும் வசீகரங்களே ஏராளமாய் உள்ளன! ஆனால் இதுபோன்றவைகளை வியந்து பாராட்டுவதின் மூலமாய், உங்கள் உள்ளான மனிதனில் மறுரூபமடையும் பெலன் கிடைக்குமா? என்பதை சிந்தித்துப் பாருங்கள்!*

> "**இவ்வாறு வெளிப்புறக் கவர்ச்சியினால் எந்த அளவுக்கு ஈர்க்கப்பட்டிருக்கிறோமோ, அந்த அளவிற்கு நம் உள்ளான ஜீவியத்தின் வளர்ச்சியில் குறைவுபடுவோம், என்ற உண்மையை நாம் மனதில் கொள்வோமாக!**

*வெளிப்புறத்திற்குரிய யாதொன்றும் நம் சந்தோஷத்தை சிறிதளவுகூட கூட்ட முடியாது! ஆனால், உங்கள் முழு இருதயமாய் 'தேவனுக்குப் பயந்து வாழ்ந்தால்' நீங்கள் சம்பூரண இரட்சிப்பை அடைவது மாத்திரமல்லாமல், நிறைவான மகிழ்ச்சியும் அடைவீர்கள்!*

*தேவனோ, நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகவே இருக்கிறார். அன்று ஏசாயாவின் நாட்களில் வெளித்தோற்றமான கவர்ச்சியை அருவருத்தார்! இன்றும் பவுல் தன்னுடைய நாட்களில் "மேட்டிமையானவைகளை சிந்தியாமல் தாழ்மையானவைகளுக்கு நம்மை இணங்கும்படியே" (ரோமர் **12:16**) புத்திசொன்னார். ஆனால் இவ்வாறு* **தாழ்மைக்கு இணங்கும் சிந்தை** *இன்று ஜனங்களிடத்தில் காணப்படுகிறதா? இல்லையே! இதற்கு நேர் எதிரிடையான மேன்மையானவைகளில்தானே நாட்டம் கொள்கிறார்கள்!*

*ஏசாயா **3:16-24** வசனங்களில், "மாயையாகிய வெளித்தோற்ற கவர்ச்சியை தங்களுக்குத் தேடுகிறவர்கள்மீதும், இப்பூமிக்குரிய உயர்ந்த வஸ்துக்களைப் போற்றி மதிப்பவர்கள்மீதும்" எவ்வாறு தேவனுடைய உக்கிரமான கோபம் வெளிப்படும் என விவரித்து கூறப்பட்டுள்ளது. தங்கள் பேச்சின் நளினம்; தங்கள் ஒய்யாரப்பார்வை; தங்களைக்குறித்து மற்றவர்களின் கணிப்பு; போன்ற சிந்தைகளால் ஆட்கொள்ளப்பட்டு வாழ்பவர்கள்மீது, தேவகோபம் தூண்டப்படுகிறது!*

*ஏனெனில், உள்ளான வசீகரத்தில் மாத்திரமே நாட்டம் கொண்டிருப்பது; அந்தரங்க ஜீவியத்தில் மறுரூபமடைவது;*

முழுமையான தேவபக்தியுடன் வாழ்வது; போன்ற ஜீவியத்திற்கு இவையாவும் நேர் முரணானவைகளேயாகும்!

**“தேவனோ அந்தரங்க தேவபக்தியின் சிந்தையில்தான் அக்கறை கொண்டுள்ளார். இதைத்தவிர வேறு சிந்தையாய் இருப்பவர்களோ, தேவனுடைய சிந்தைக்குத் தூர விலகி நிற்கிறார்கள்!**

*இவ்வித ஆவிக்குரிய தரத்தின்படி, உங்கள் ஆத்துமாவில் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுவதற்குரிய பொன்னான வாய்ப்பையே இன்று நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். இதுவே இரட்சிப்பிற்கெல்லாம் “கருப்பகுதி” என்றுகூட சொல்லிவிடலாம்! சற்று கவனித்துக் கேளுங்கள்: “உங்கள் உண்மை நிலையைக் காட்டிலும்” உங்களை மேலானவர்களாக ஜனங்கள் எண்ணுவதை, நீங்கள் அறிந்துகொண்ட பின்பு, நீங்கள் ஓர் சுத்த மனசாட்சியுடன் வாழ்வது ஒருக்காலும் சாத்தியமாகாது!*

*இவ்வித சூழ்நிலைகளில், உங்கள் மனசாட்சியை கடினப்படுத்தி, மனசாட்சியை ‘வாயடைக்கச்செய்யும்’ நிலைக்கே நீங்கள் தள்ளப்படுவீர்கள். நான் கண்டடைந்த, மெய்யான பக்தி என்னவெனில், நான் பேசியவைகளை வைத்து, நான் நடந்துகொண்ட முறையை வைத்து, பிறர் என்னுடைய ‘உண்மை நிலையைக் காட்டிலும்’ மேன்மையாக எண்ணும்படிச் செய்யும் காரியம் ஏதாகிலும் என்னிடம் சம்பவித்தால், அவ்வித நிலையை என்னால் ஒருநாள்கூட தாங்கிக்கொண்டு உயிருடன் வாழமுடியாது, என்பதேயாகும்!*

மற்றவர்கள் ‘கண் முன்பாக’ கனப்படுத்தப்படுவதில்தானே இன்று ஜனங்கள் சிந்தைகொண்டு இருக்கிறார்கள்! ஆனால் நமக்கோ **“தேவன் என்னைக் குறித்து என்ன எண்ணுகிறார்?”** என்பதே பிரதானமாகும்! இன்று நீங்கள் வாலிபராக இருந்தால், எஞ்சியிருக்கும் உங்கள் வாழ்நாளெல்லாம் “தேவன் உங்களைக் குறித்து என்ன எண்ணுவார்?” என்ற ஒரே சிந்தையிலேயே வாழுங்கள்!

இயேசு இப்பூமியில் வாழ்ந்தபோது, வெளிப்புற மேன்மைகளை எவ்விதம் புறக்கணித்தாரோ ‘அதேபோல்’ நீங்களும் புறக்கணித்து, உங்கள் அந்தரங்கத்திலோ **சம்பூரண அழகு** கொண்டவர்களாய் வாழ்ந்தால், உங்களையே தன்னுடைய மணவாட்டியாக அவர் ஏற்றுக்கொள்வார்! அல்லேலூயா.

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

## நிலைத்திருக்கும் தெய்வ அன்பு, நமக்கு உயிர்நாடி!

*உயிர் போனாலும் 'தெய்வ அன்பை' இழப்பதில்லை*

என் வாலிப வயதில், தெய்வ அன்பைவிட்டு என்னைப் பிரிக்க முயற்சித்த மாய அன்பின் முகப்பில் நின்று, தேவனை நோக்கி கதறினேன்! இவ்வாறு தேவனிடத்தில் கதறும் தெய்வ பயமும், தாழ்மையும் இருக்கும் இடத்தில், தேவன் நிச்சயமாய் தமது 'தெய்வீக' வழியை நமக்கு போதிப்பார்!

மாய அன்பின் பிடியிலிருந்து நான் மனந்திரும்பிய பிறகுதான் "தேவன் அன்பாகவே இருக்கிறார்!" என்பதின் பொருளை நான் கற்றுக் கொண்டேன். தேவன் ஒரு மனிதனை நேசிக்கும் போது, அந்த மனிதனை நேசிப்பதற்குரிய காரணங்களை அவர் தேடுவதில்லை!

> " **தேவன் நம்மில் எவ்வாறு அன்புகூருகிறார்? அது ஏனெனில், தேவனுடைய இருதயமே அன்பினால் உருவாக்கப்பட்டு இருக்கிறது என்ற ஒரேயொரு காரணமேயாகும்!**

விசுவாசிகளாகிய நீங்களே கூறுங்கள்: "அவரே உங்களை சிருஷ்டித்தார்.... அவரே உங்கள் பாவங்களுக்காக மரித்தார்! அப்படியிருக்க, உங்களை எப்படி அன்புகூராமல் இருப்பார்?.... **இந்த உண்மையை** உங்களால் ஏற்றுக்கொள்ள முடிகிறதா?" இவ்வாறு, **அவரது தெய்வ அன்பு** இன்னதென்பதை உங்களால் அறிய முடியவில்லையென்றால்.... உங்கள் வாழ்வில் துன்பமும், நஷ்டமும் ஏற்படும்போது, உங்கள் விண்ணப்பத்தை அவரிடம் விசுவாசத்தோடு கூறி, உங்களால் எங்ஙனம் ஜெபிக்க முடியும்?

> " **'அன்பே பிரதானமானது' என நாம் அறிந்திருக்கிறோம். தேவனை அன்புகூருவதும், பிறரை அன்புகூருவதும் ஆகிய இந்த அற்புத செயல் நம்மில் ஒருவருக்கும் தூரமானது அல்ல. அது ஏனென்றால், நம்மில் எல்லோருக்கும் இருதயம் உள்ளது! இருதயம் இல்லாமல் ஒருவரும் வாழ இயலாது. அதுபோலவே அன்பில்லாத இருதயமும் பிழைத்திருக்க இயலாது!**

'உயிரைப் போன்று உள்ள அன்பை' நான் ஏன் நாடி வாஞ்சிக்க வேண்டும்? என ஒருவன் கேட்பது தகுதியான கேள்வி அல்ல. யாதொரு கேள்வியும் கேட்காமலே, பிறரிடம் அன்புகூர நாம் பழகுவோமாக. மெய்யான அன்பிற்கு முன்பாக 'காரணங்கள்' நிலை நிற்பதில்லை. நான் ஏன் அன்பு கூர வேண்டும்? என்ற முட்டுக்கட்டை போடும்

காரணங்கள் விலகி விட்டால், **தேவ அன்பு** நம்மை நிறைத்துவிடும்! இவ்வாறு மிக எளிய விதத்தில் அன்புகூர முயற்சித்துப் பாருங்கள். அப்பொழுது, ஒரு 'தத்துவ ஞானி' கூட அடைந்திட முடியாத மேன்மையை நீங்கள் அடைந்திடுவீர்கள்.

தூர்ந்து போன மனுஷீக அன்பின் துரவுகளில் பானம் செய்வதை விட்டுவிட்டு, ஜீவ நதி புரண்டோடும் திவ்விய ஊற்றண்டை தாகம் தீர்க்க வாருங்கள்! இந்த ஜீவ ஊற்றை கண்டடைந்தவன், அதை விட்டுவிட்டு மாய அன்பிற்கு ஒருபோதும் செல்லமாட்டான்!

- மேடம் குயான்

---

## முகமுகமாய் தேவனை தரிசித்து வாழ்ந்த மோசே!

*ஜனங்களால் வந்த துன்பத்திலும் 'விட்டு விலகாத' மேய்ப்பன்*

எகிப்திலிருந்து தேவன் நடத்தி வந்த இஸ்ரவேல் ஜனங்கள், சீனாய் மலையின் கீழ், கர்த்தருக்கு விரோதமாய் 'வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டியை' உண்டாக்கியதால், ஜனங்கள்மீது கர்த்தர் கோபங் கொண்டார் (உபா.9:16). பின்பு ஜனங்களின் 'கீழ்ப்படியாமை' பாவங்களினிமித்தம், அவர்களுக்காக பரிந்துரை ஜெபம் ஏறெடுக்க, மலையின்மேல் மோசே மீண்டுமாய் ஏறிச்சென்றதை அவர் குறிப்பிட்டு "உங்களுடைய சகல பாவங்கள் நிமித்தமும், நான் கர்த்தருக்கு முன்பாக முன்போலவே இரவும், பகலும் நாற்பதுநாள் விழுந்துகிடந்தேன். நான் அப்பம் புசிக்கவுமில்லை, தண்ணீர் குடிக்கவுமில்லை" (உபா.9:18) என கூறினார்.

இவ்வாறு ஜனங்களினிமித்தமாய் துன்பப்பட்டு, மோசே மன்றாடி ஜெபித்தபின்பு, மீண்டுமாய் பாளயத்திற்கு ஜனங்களிடத்திற்கு திரும்பி வந்தார். அப்போது அவருடைய முகம், தேவ மகிமையின் ஒளியினால் பிரகாசித்தது! அந்த மகிமை, மண்ணுக்குரியதாய் இல்லாதபடியால், மோசேயை பார்க்கும்படி நெருங்கிவர, ஆரோனும், ஜனங்களும் மிகவும் பயந்தார்கள். ஆகவே, மோசே ஜனங்களிடம் போவதற்கு, தன் முகத்தை முக்காடிட வேண்டியதாய் இருந்தது!

> **"உண்மைதான், மனுஷருக்கு முன்பாக அவர் முக்காடிட்டார்! தேவனுக்கு முன்பாகவோ திறந்த முகமாய் இருந்தார்!**

எனவே, அவர் தேவனிடம் பேசுவதற்கு மீண்டுமாய் சென்றபோது, அந்த முக்காடை அகற்றிவிட்டார்! அதை வேதம் குறிப்பிடும்போது "இந்த மகத்துவமுள்ள பிரகாசம் அல்லது வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி,

*இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்''* என 2கொரிந்தியர் 4:7 வசனத்தில் *பவுல் பிரகடனம் செய்தார்.*

இதுமுதற்கொண்டு, மோசேயின் பிரதான ஊழியமாய் இருந்ததெல்லாம், ஜனங்களிடத்தில் 'தேவனுடைய சித்தத்தை' அறிவிப்பதாக மாத்திரமே இருந்தது! ஆகவேதான் *"மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகவும் சாந்தகுணமுள்ளவனாய் இருந்தான்''* என வேதம் எடுத்துரைக்கிறது (எண்.12:3). மோசே தேவனோடு கொண்ட உறவில் 'முகமுகமாய்' இருந்த பிறகே, இவ்வளவு பெரிய தெய்வீக சுபாவத்தின் அடையாளம் அவரிடம் காணப்பட்டது. ஏனெனில், பரிசுத்த பிள்ளையாக இருந்த இயேசு மாத்திரமே *"நான் சாந்தமும், மனதில் தாழ்மையாகவும் இருக்கிறேன்''* (மத்தேயு 11:29) எனக் கூறினார். இதே ஜீவியத்தை நாம் பங்கடையும்போது, அவருடைய சாயலுக்கொப்பாக மறுரூபமடைந்து, **நாமும் சாந்தமுள்ள ஆவி கொண்டவர்களாய் மாறுகிறோம்!** இதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றதாய் இருக்கிறது!

> "இவ்வாறு தேவனை 'முகமுகமாய் பார்த்த பிறகே' இந்த மோசே, பிற்காலங்களில் அதிக பிரகாசமாய் விளங்கினான். மோசேக்கு ஜனங்களிடமிருந்து வந்த வேதனைகளும், சோதனைகளும் அதிகரித்துக்கொண்டே போனது. அதினிமித்தமாய், சாந்தமும் பொறுமையும் நிறைந்த தேவனை, மோசே அடிக்கடி சந்தித்து ஐக்கியம் கொண்டார்! இவ்வாறாகவே, ஜனங்களை முடிவுவரை சகித்து வாழ அவரால் முடிந்தது!

*உபத்திரவத்தின் அநேக சமயங்களில், இந்த 'பரத்தின் ஆவி' அவரிடமிருந்து பிரகாசித்தது. தன் சுய-மகிமையிலிருந்து விடுதலை பெற்ற மோசே, ஒருசமயம் மோசேயின் தலைமைத்துவத்தின் மீது வைராக்கியம் கொண்டிருந்த யோசுவாவிடம் "நீ எனக்காக வைராக்கியம் காண்பிக்கிறாயோ? கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனம் சொல்லத்தக்கதாக, கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள்மேல் இறங்கப்பண்ணினால் நலமாயிருக்குமே, என்றான்'' (எண்.11:29). அதைத் தொடர்ந்து, மிரியாமும், ஆரோனும் மோசேக்கு விரோதமாய் பேசிய சமயத்திலும், "ஆட்டுக் குட்டியானவரின் அமைதியான ஆவியை'' அவருக்குள் நாம் காணமுடிந்தது! (எண்ணாகமம் 12 ).*

இதுபோன்ற கடினமான ஜனங்களின் மத்தியில் *மோசே* சென்று கொண்டிருந்த சமயம், *மோசே* பயந்திருந்த 'முன்போன்ற

*செயல்' ஏற்பட்டது. எப்படியெனில், "வாக்குதத்தம் செய்யப்பட்ட பூமியை" ஜனங்கள் நெருங்கிவிட்ட பிறகும், இஸ்ரவேல் ஜனங்களோ கடின இருதயம் கொண்டவர்களாய், மனதளவில் வனாந்திரத்திற்கு மீண்டும் திரும்பிச் சென்றார்கள்! மோசே ஒரு பெலன் கொண்ட தலைவனாய் உயிரோடிருக்கும்போதே, சில ஜனங்கள் ஒன்றுகூடி, மீண்டும் எகிப்திற்குச் செல்லும்படி, தங்களை நடத்துவதற்கு வேறொரு தலைவனை முன்மொழியத் தொடங்கிவிட்டார்கள்! இச்சமயத்தில் இடைப்பட்ட தேவன் 'ஜனங்களை நிர்மூலமாக்குவதாக' எச்சரித்துக் கூறியபிறகு, 'மீண்டுமாய்' மோசேயே முன்சென்று நடத்த உறுதிபட நியமனம் செய்தார்!*

*தேவன் வழங்கிய உயர்ந்த ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டிருந்த மோசே, முரட்டாட்டமான இஸ்ரவேல் ஜனங்களின் வறண்ட வாழ்க்கையை தவிர்த்திருக்கக்கூடும். ஆனால், மோசே 'தனக்கு சுயமாய்' சிந்திப்பதற்கு மறுத்து, அந்த ஜனங்களோடு தன்னைச் சேர்த்துக்கொண்டு பாடுபட்டார்!*

*'இதே நிலையில்' நாற்பது ஆண்டுகளாய் இந்த ஜனங்களோடு வனாந்தரத்தில் அலைந்தபிறகு, முடிவில் மோசே 'ஒரே ஒரு' தவறு செய்யும் இடத்திற்கு வந்துவிட்டார்!*

> **"இத்தனை வறட்சியான வனாந்திரத்தில் அலைந்து திரிந்த மோசே, ஜனங்களின் தீராத அவிசுவாசத்தை எதிர்கொண்டு மனச்சோர்வடைந்த நேரத்தில் "தன் உதடுகளினால் பதறிப் பேசினான்" என வாசிக்கிறோம் (சங் 106:33).**

*எப்படியெனில் தேவன் அவனைப் பார்த்து "கன்மலையைப் பார்த்து பேசு" எனக்கூறிய சமயத்தில், தேவனுக்கு கீழ்ப்படிய தோல்வியடைந்து, மனம் கசப்படைந்தார்! அதனிமித்தமாய், கன்மலையை இரண்டு முறை அடித்துவிட்டார். ஜனங்களுக்கு முன் நீதி தவறாமல் இருக்க வேண்டிய இந்த மோசேயின் "ஒரே ஒரு பிழையை" கண்டுங்காணாமல் தேவன் இருந்திட முடியவில்லை! பாவம் எந்த ரூபத்திலும், அது இஸ்ரவேலரிடத்திலோ அல்லது மோசேயிடத்திலோ காணப்பட்டாலும் அது நிச்சயமாய் நியாயந்தீர்க்கப்பட வேண்டும்!*

> **"எவ்வளவு அதிகமாய் தேவனை 'முகமுகமாய்' அறிந்திருக்கும் சிலாக்கியத்தை மோசே பெற்றிருந்தானோ, அவ்வளவுக்கு அதிகமாய் 'சிறிதளவு உண்மையற்ற பாவத்தையும்' மிகப்பெரியதாய் தேவன் கண்டார். ஏனெனில் "இஸ்ரவேல் ஜனத்திற்கு முன்பாய்" அவன்**

**கடைப்பிடித்து வாழ்ந்த 'தேவன் பேரில் கொண்ட விசுவாசத்திலிருந்து' சற்றே தவறியவனாய் நின்றான்! அதனிமித்தமாய், கர்த்தர் அவனைப் பார்த்து "நீ எதற்காக ஜனங்களை நடத்தி வந்தாயோ, அந்த வாக்குதத்த பூமியை நீ காண்பாய். ஆனாலும் அதற்குள் நீ பிரவேசிப்பது இல்லை" என கூறிவிட்டார் (உபா.32:51,52).**

*"ஆகையால், தேவனுடைய தயவையும், கண்டிப்பையும் பார்! விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்தில் தயவையும் காண்பித்தாரே! அந்த தயவிலே நிலைத்திருப்பாயானால், உனக்கு தயவு தொடர்ந்து கிடைக்கும். நிலைத்திராவிட்டால் 'நீயும்' வெட்டுண்டு போவாய்" என சத்தியம் இருக்கிறபடியால், நாம் யாவரும் தேவனுக்கு பயந்து வாழ்ந்திட ஜாக்கிரதை கொண்டிருக்கக்கடவோம்!*

இறுதியாக, மோசே மீண்டுமாய் *பிஸ்காவின்* கொடுமுடியில் ஏறினான்! அங்கிருந்து, வாக்குதத்த பூமி அனைத்தையும் மோசே கண்டார்! அங்கே மரித்த மோசேயை, தேவன் அடக்கம் பண்ணினார்! (உபா. 34:4-6). தேவனுடைய தாசனாகிய மோசேயைக் குறித்து கூறப்பட்ட அபூர்வ வாசகங்களை கேளுங்கள்: "*மோசே மரிக்கிறபோது 120 வயதாயிருந்தான்! அவன் கண் இருளடையவும் இல்லை, பெலன் குறையவும் இல்லை!*" (உபா.34:7). கண்டீர்களா இந்த விந்தையை, இத்தனை நீண்ட ஆண்டுகளாய் மோசே 'தேவ ஜனத்தோடு' துன்பம் சகித்து வாழ்ந்தாலும், கர்த்தருடைய மந்தைக்கு மேய்ப்பனாயிருந்த பொறுப்பிலிருந்து விலகவும் இல்லை! அவன் இளைத்துப் போகவும் இல்லை! அதன் இரகசியம் என்னவென்றால், தேவனே மோசேக்குப் பெலனாய் இருந்தார்! ஆமென்.

*- ஜெஸி பென் – லூயிஸ் (18ம் நூற்றாண்டு)*

---

## கர்த்தருக்கு 'தாழ்ந்த ஊழியம்' என எதுவுமே இல்லை!

*பிறர் பாதம் கழுவும் ஊழியமும், தெய்வீகமே*

அமெரிக்க தேசத்தில் கர்த்தருடைய ஊழியராய் இருந்த *'டக்நிக்கோலஸை'* **இந்திய தேசம் செல்லும்படி** கர்த்தர் அழைத்தார். கர்த்தருடைய அழைப்பிற்கிணங்கி இந்திய தேசம் வந்த *டக்நிக்கோலஸ்,* தேவனுடைய சுவிசேஷப்பணியை செய்திடத் துவங்கினார். இந்திய தேசத்தில் செய்திட வேண்டிய சுவிசேஷப்பணி ஏராளமாய் இருந்தது! கோடி கோடியான மக்கள் உயிரற்ற பல்வேறு மதவாதங்களைக் கொண்டிருந்தார்கள். அவர்களை ஜீவனுள்ள தேவனிடத்திற்கு கொண்டு வருவது கடினமான பணியாகவே காணப்பட்டது. இந்த கடினமான ஊழியத்தைதான், "**தன்னை நம்பி கர்த்தர் ஒப்புக்கொடுத்தார்**"

*என்பதில் டக்நிக்கோலஸ் உறுதியாய் நின்றார். ஆகவே, 'கடின இருதயம் கொண்ட ஜனங்களைப் பார்த்தவுடன்' சிறிதளவும் மனதில் சோர்வு உண்டாவதற்கு அவர் இடம் தரவில்லை. இது கர்த்தருடைய அழைப்பு தானா? என்ற சந்தேகத்திற்கும் அவர் இடம் தரவில்லை!*

*ஆனால் அவ்வித உறுதியுடன் செயல்பட்ட கர்த்தருடைய ஊழியர் டக் நிக்கோலஸ், கொடிய காசநோயினால் பீடிக்கப்பட்டார். மருத்துவமனையின் உள்நோயாளியாக சேர்க்கப்பட்ட அவர் 'யாதொரு ஊழியமும் செய்திட இயலாத' நிலையில் இருந்தார். அதுமாத்திரமல்ல, அவரைச் சேர்த்திருந்த மருத்துவமனை, எந்த வசதியும் இல்லாத மோசமான தரமுடையதாய் இருந்தது.*

**"இதுபோன்ற சூழ்நிலையில் "இவ்வித கொடிய நோய்" அவரது தாசருக்கு ஏன் ஏற்பட வேண்டும்? நல்ல சுகமுடன் இருந்தால் கர்த்தருக்கு அநேக ஊழியங்கள் செய்திட முடியுமே? அமெரிக்க தேசத்திலேயே இருந்து ஆரோக்கியத்துடன் ஊழியம் செய்திருக்கலாமே? போன்ற கேள்விகளை எளிதாய் நாம் கேட்டுவிட முடியும்!**

*ஆனால் இதுபோன்ற சந்தேக கேள்விகளுக்கு டக்நிக்கோலஸ் இடம்தர மறுத்து 'மனச்சோர்வுகளை' களைந்து போட்டார். கர்த்தருக்கு முன்பாக உறுதியான தீர்மானம் பூண்டவராய் "மருத்துவமனையின் உள்நோயாளிகளின் பிரிவில், தங்கியிருந்த நோயாளிகளுக்கு" சுவிசேஷம் அறிவிப்பதென வைராக்கியம் கொண்டார்! தான் கைவசம் கொண்டு வந்திருந்த இந்திய மொழிகளில் அச்சிடப்பட்ட கைப்பிரதிகளை ஒவ்வொரு நோயாளி படுக்கைகளுக்கும் சென்று, புன்முறுவலுடன் கொடுத்தார்! சொற்ப நோயாளிகளைத் தவிர, மற்ற நோயாளிகள் அனைவரும் டக்நிக்கோலஸ் மீது, கடுங்கோபம் கொண்டார்கள்: "என்ன இது, ஒரு அமெரிக்க தேசத்தான், இந்திய மருத்துவமனையின் படுக்கையில் படுத்துக்கொண்டு தன் மதத்தை பரப்புகிறான்" என துவேசம் கொண்டார்கள். அவர் கொடுத்த கைப்பிரதிகளை கசக்கி எறிந்தார்கள்!*

**"ஆனால் ஆண்டவரோ, *டக்நிக்கோலஸ் சிரத்தை எடுத்த* சுவிசேஷப் பணிக்கு, வேறுவிதமாய் செயல்படுத்தும் பாதையை உண்டாக்கினார்!**

*அங்கிருந்த ஒரு பிணியாளி மிகவும் நோய்வாய்பட்டிருந்த படியால், எழுந்து உட்காருவதற்கு மிகவும் கஷ்டப்பட்டு உட்கார்ந்தார். பின்பு அவர் 'பாத்ரூம்' செல்வதற்கு முயற்சி செய்தும் அவரால் முடியவில்லை. அந்த சூழ்நிலையில் தன் ஆடையில் மலஜலம் கழித்து,*

அந்த இரவு நேரத்தில் எல்லா நோயாளிகளும் விழித்துக் கொண்டனர்! மருத்துவமனை முழுவதும் துர்நாற்றம் வீசத் தொடங்கியது. எல்லா நர்ஸ்மார்களும் அங்கே வந்து ‘அந்த வயதான நோயாளியை’ தீய வார்த்தைகளால் சபித்தார்கள். அந்த இடத்தை முழுவதும் சுத்தம் செய்ய வேண்டியிருந்தபடியால், பக்கத்து படுக்கையிலிருந்த ஒருவர் ஆத்திரமுடன் ஓங்கி அவரை அறைந்து விட்டான். ஏற்கனவே சிறுமைப்பட்டிருந்த அந்த நோயாளி, இப்போது அதிகமாய் மனம் உடைந்துபோனார்!

அடுத்தநாள் இரவில், அதே நோயாளி, படுக்கையைவிட்டு எழும்பி ‘பாத்ரூம்’ செல்ல முயற்சித்தார். மிகவும் பலவீனமாயிருந்த அந்த நோயாளி மீண்டுமாய் படுக்கையில் சாய்ந்து, எழுந்திருக்க முடியாமல் அழ தொடங்கிவிட்டார்! ஊழிய சகோதரர் டக்நிக்கோலஸ் அதிக பலவீனமாயிருந்தாலும், எழுந்து அவர் படுக்கைக்குச் சென்று கைத்தாங்கலாய் பாத்ரூமிற்கு அழைத்துச் சென்றார். அவர் பாத்ரூமிலிருந்து வெளியே வரும்வரை காத்திருந்து கைத்தாங்கலாய் படுக்கையில் அமரவைத்தார்! இதற்குள்ளாக, எல்லா நோயாளிகளும் விழித்துக்கொண்டார்கள். நடந்த நிகழ்ச்சி அனைத்தையும் பார்த்தார்கள்:

*தங்களோடு, நோயாளி வார்டில் வியாதிப்பட்ட அந்த அமெரிக்க ஊழியர்மீது அவர்கள் காண்பித்த வெறுப்பு, வேகமாய் மறைந்து போனது! ஒரு நோயாளி, துரிதமாய் சென்று சூடான தேநீர் கோப்பையோடு டக்நிக்கோலஸ் படுக்கைக்கு வந்து கொடுத்தார்! அன்று அந்த நோயாளி கசக்கி போட்ட சுவிசேஷ கைப்பிரதி தனக்கு வேண்டுமென்று கேட்டு வாங்கிப் படித்தார். பின்பு, ஒவ்வொருவராய் எல்லா நோயாளிகளும் டக்நிக்கோலஸிடமிருந்து சுவிசேஷப் பிரதியை வாங்கிப் படித்தார்கள். மருத்துவமனையில் நிகழ்ந்த வியக்கத்தகும் மாறுதலைக் கண்ட மருத்துவர்களும், அங்குள்ள நர்ஸ்மார்களும், எல்லா துப்புரவு பணியாளர்களும், டக்நிக்கோலஸிடம் வந்து சுவிசேஷ கைப்பிரதிகளையும், யோவான் சுவிசேஷப் புத்தகங்களையும் வாங்கி படித்திட துவங்கினார்கள். அதுமாத்திரமல்லாமல், அவர்களில் அநேகர் தாங்களாகவே முன்வந்து, ஆண்டவராகிய இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டார்கள்.*

“

**இத்தனை மாற்றத்திற்கும் காரணம் என்னவென்றால் *டக்நிக்கோலஸின்* ஜீவியத்தில் வாசமாயிருந்த இரட்சகரை, அவர்கள் கண்கூடாய்**

**கண்டார்கள். டக்நிக்கோலஸின் "கிறிஸ்துவை போன்ற மனதுருக்கம்" அவர்கள் நெஞ்சத்தை தொட்டது!**

*ஆண்டவராகிய இயேசு போதித்தபடி "உலகத்தாரைப் போன்று மேலோட்டமான அன்பு பாராட்டுவது மாத்திரம் போதாது" அதைக் காட்டிலும் மேலாய் 'நம்முடைய செயல்பாடுகள் அனைத்தும்' கிறிஸ்துவை வெளிப்படுத்தி காண்பிப்பதாய் இருக்க வேண்டும்! கிறிஸ்துவின் அன்போ, இந்த உலகத்தின் அன்பைப்போல் இல்லாமல் 'இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வ அன்பின் செயல்பாடுகளாய்' இருந்தது! நம்மைச் சுற்றியுள்ள ஜனங்களுக்கு கிறிஸ்துவின் மனதுருக்கத்தை காண்பிக்க வேண்டும். எஜமானாகிய கிறிஸ்து, சீஷர்களின் பாதத்தை கழுவியதை நாம் மறக்கலாகாது! அழிந்துபோகும் ஆத்துமாக்கள் மத்தியில், மாற்றத்தை ஏற்படுத்துவது எல்லாம், இந்த உலக அன்பின் தரத்தைவிட, 'நமது அன்பின் நடத்தைகள்' மிகச் சிறந்ததாய் பிரகாசித்து காட்ட வேண்டியது, நம் யாவர்மீதும் விழுந்த கடமையாய் இருக்கிறது! ஆமென்.*

*- வில்லியம் மேக்டோனால்டு*

---

## 'மென்மையான குணம்' கிறிஸ்தவத்திற்கே உரியது!

*மென்மையான மாந்தன் பரலோகவாசி*

*கிறிஸ்துவின் சகாப்தம் ஆரம்பிப்பதற்கு முன்பாக, மென்மையான நற்குணம் Gentleness என்ற பண்பு மிக அரிதாகவே காணப்பட்டது. ஆகவேதான் மென்மையான குணசீலன் Gentleman என்ற அழைப்பின் சொல், கிறிஸ்துவுக்கு முன் காணப்படவே இல்லை! அது ஏனென்றால், இத்தனை மேன்மையான தெய்வீக குணத்தை 'கிறிஸ்தவ விசுவாசமே' வழங்குகிறது! இதை வேதாகமம் " பரத்திலிருந்து வருகிற ஞானமோ... சமாதானமும், சாந்தமும்... மாயமற்றதாயுமிருக்கிறது" என கோடிட்டு கூறுவதை கவனியுங்கள்! (யாக் 3:17). புனிதர் பிரான்சிஸ் ஆஃப் சாலஸ் குறிப்பிடும் போது "மென்மையான குணசீலன்" என்ற வலிமைக்கு ஈடாய், இவ்வுலகில் 'வலிமையானவன்' என யாருமில்லை! என்றே கூறினார். அதுபோலவே, 'மென்மையான நற்குணம்' என்ற வலிமைக்கு ஈடாய் பிரிதொரு நற்குணமும் இல்லை! என்றும் புனிதர் சாலஸ் குறிப்பிட்டார். பண்டிதர் சார்லஸ் டிக்கன்ஸ் கூறும்போது:*

**" ஒருவன் தன் இருதயத்தில் மெய்யாகவே 'மென்மையான நற்குணம்' Gentleness பெற்றிருக்காவிட்டால், அவன் மென்மையான குணசீலனாய் Gentleman ஒருபோதும் மாறிடமுடியாது!**

இத்தனை அருமையான கிறிஸ்தவ பண்பை, ஒருவன் பெற்று பிரகாசித்திடும்போது, அது அந்த மனிதருக்குள் வல்லமையான கிரியை செய்ததை, நான் கண்ணார கண்டிருக்கிறேன்! எப்படியெனில், முரட்டுகுணமும், கடின இருதயமும் கொண்டிருந்த ஒருவன், தன் இருதயத்தை இரட்சகர் இயேசுவின் மீது வைத்த விசுவாசத்தைக் கொண்டு திறந்து கொடுத்தபோது, நாட்கள் செல்லச் செல்ல மென்மையும், பொறுமையும், மனதுருக்கமும் நிறைந்த குணசீலர்களாய் மாறியிருக்கிறார்கள்!

*பில்லி கிரஹாமாகிய* நான், லண்டன் மாநகருக்குச் சென்றபோது ஃபோர்டு மோட்டார் கம்பெனியிலிருந்து எங்களுக்கு இரண்டு புதிய ஃபோர்டு கார்களையும், இரண்டு ஓட்டுனர்களையும் ஊழிய உதவிக்கு அனுப்பித் தந்தார்கள். அவ்வாறு வந்த ஓட்டுனரில் ஒருவர், மிக சிடுசிடுப்பும், கடின நெஞ்சுடையவராய் இருந்தார்! எல்லா சமயங்களிலும் கடின வார்த்தைகளையே பேசினார். தனக்கு யாராவது தீங்கு இளைத்ததுபோல் கண்டால், கொதித்துப் போவார்! எங்களுக்கு ஓட்டுனராய் உதவிசெய்த நாட்களில், ஒருநாள் எங்கள் கூட்டத்திற்கு உள்ளே வந்து உட்கார்ந்தார். எங்கள் கூட்டத்தை ஒரு வழக்கமான கிறிஸ்தவ கூட்டம் என்று எண்ணி, எந்த விருப்பமான பிடிப்பும் அற்றவராய் வந்து அமர்ந்தார். கூட்டத்தில் அசைவாடிய பரிசுத்த ஆவியானவரின் கிரியைக்கு அவர் தப்ப முடியவில்லை! பின்பு தொடர்ந்து இரண்டு நாளும் வந்தார்.

> “ **முடிவாக, கிறிஸ்துவுக்காக தீர்மானம் எடுக்கும் ஆலோசனை கூட்டத்தில் வந்து அமர்ந்துவிட்டார்! இவ்வளவு கடினகுணம் கொண்ட ஒரு மனிதன் முற்றிலும் மாறிய நிகழ்ச்சி, வேறு எங்கும் நீங்கள் கேட்டிருக்க முடியாது.**

அந்த விலையுயர்ந்த நவீன காரின் ஓட்டுனராகிய அவர் ‘ஒரு புதுசிருஷ்டியாய்’ மாற்றமடைந்தார்! அவருடைய கடின குணம், வறட்டு கௌரவம் போன்ற தீமைகள் யாவும் மெழுகுபோல அவரிடமிருந்து விலகிப் போய்விட்டன. தன் ஓட்டுனர் பாக்ஸில் வைத்திருந்த பாலிய கேவலமான படங்களையும், புத்தகங்களையும் மொத்தமாய் சுருட்டி குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டார். பின்பு ஓர் அழகிய புதிய ஏற்பாட்டு புத்தகத்தை வாங்கி, மனப்பாடம் செய்யக் தொடங்கிவிட்டார். எங்களுக்கு உதவியாய் வந்த ஏழுநாட்களில், மாற்றமடைந்து, ஓர் கிறிஸ்தவ மென்மையான குணசீலனாயும் - Gentlemanஆய் மாறிவிட்டார்! ஒரு கடினமனிதன் மென்மையான

*குணத்திற்கு மாற்றமடைந்த செயலை எங்கள் கண்கூடாகக் கண்டோம்!*

> **"மெய்யாகவே "ஆவியின் கனியான.... நீடிய பொறுமை, தயவு (Gentleness) நற்குணம்..." நிறைந்த ஜீவியத்தை பரிசுத்த ஆவியானவர் ஒருவரே நமக்கு வழங்கிட முடியும்! (கலா 5:22).**

*ஒலிம்பிக் துரித ஓட்ட பந்தய வீரர்* **எரிக் லிடல்** *மிஷனெரி யினுடைய 'அக்கினி ரதங்கள்' என்ற படக்காட்சியை நான் பார்த்திருக்கிறேன். அவர் பந்தயத்தில் மாபெரும் ஜெயம் பெற்று வந்த ஒவ்வொரு நேரத்திலும் 'வார்த்தையால் விவரிக்க முடியாத'* **தாழ்மையுடையவராய்** *இருந்தார்! சில நேரங்கள் சம்பவித்த தோல்வி நேரத்திலோ "***அபூர்வமான மனஅமைதியின்** *விசாலத்தை காண்பித்தார்!" இந்த நற்குணப் பண்பையே, படக்காட்சியின் முடிவில் அவருக்கு போற்றுதலாய் கூறப்பட்டது! ஒரு மென்மையான நற்குணத்திற்கு எரிக் லிடலின் மாதிரியே அன்றி, வேறு விளக்கம் இருக்கப் போவதில்லை என்றே நான் வியப்படைகிறேன்!*

*- பில்லி கிரஹாம் USA*

---

## "பரலோக ராஜ்ஜியத்தின் செழிப்பிற்கு" வழிவகுத்த இயேசு!

*வறண்ட நிலத்தில், துளிர்விடும் ஆவிக்குரிய பசுமை*

*இந்தப் பாருலகில், ஒரு மரக்கன்று மண்ணில் வேர்விட்டு செழித்திட வேண்டுமானால், நல்ல நீர்வளம் வேண்டும்! இதுவே மண்ணுலகின் நியதி! ஆனால்,* **விண்ணக செழிப்பான வாழ்வின் நியதியோ** *இதற்கு முற்றிலும் வேறுபட்ட நியதி! நீர்வள செழிப்பில் வேர்விடுவதையே மானிடர் அறிவர்! ஆவிக்குரிய ஜீவியத்தின் வறட்சியான நேரம் என்பது, 'தண்ணீர் இல்லாததினால் அல்ல!' மாறாக நஷ்டங்கள், துன்பங்கள், நிந்தைகள், இழப்புகள் மற்றும் ஏழ்மையான தாழ்ச்சியின் நேரங்களே, அவர்களுக்கு வறட்சியான நேரமாய் மாறிவிடுகிறது! ஆனால், ஆவிக்குரிய வளர்ச்சி நாடுபவர்களுக்கு அதுவே, பரத்திற்குரிய* **வேர்விடும் நேரமாய், தேவனால் நியமிக்கப்பட்டுள்ளது!**

*தங்கள் கிறிஸ்தவத்தை, புறஜாதி மக்களைப்போல் "பூமிக்குரிய செழிப்பில்" மனது வைத்தவர்களுக்கு "விண்ணுக்குரிய செழிப்பின்" வழி எக்காலத்தும் தெரியப்போவதில்லை! எனவேதான், அவர்களின் ஜீவியத்தில் 'யாதொரு சிறிய வறட்சி' சம்பவித்தாலும், துவண்டு வாடிப்போகிறார்கள் (மத்.13:6). ஆனால், தெய்வ பயத்தில் வாழும் உத்தம கிறிஸ்தவ விண்மக்களுக்கு, அப்படி அல்ல...*

"

**'வறண்ட நேரமே' பரத்தின் வேர்விடும் நேரம் என அறிந்து, மிகுந்த விழிப்புடன் ஜீவித்து, பரன் நோக்கி தேவனுக்கு முன்பாக, பசுமையாய் துளிர்விட்டு வளர்வார்கள்!**


*பொருளாதார நெருக்கடியும், கஷ்ட நேரமும் யாதொரு மனிதனையும் வறட்சிக்கும், மனமடிவுக்கும் உந்தித் தள்ளிவிடுகிறது! ஆனால், பரத்தின் நியதியை கண்டவனோ "தன் தரித்திரத்தில் வேர்விட்டு விசுவாசத்தில், துளிர்விடும் ஐசுவரியவனாய் மாறுகிறான்" என யாக்கோபு 2:5 கூறுவதைப் பாருங்கள்! இவர்களே, "ஆகாயத்து பட்சிகளைப் பிழைப்பூட்டி மகிழ்ந்து பாடச்செய்யும் தங்கள் பரம தகப்பனை" நடைமுறையில் அனுபவிக்கிறார்கள்! (மத்.6:26). ஆம், இவர்களே "போதுமென்ற மனதோடு கூடிய தேவ பக்தியின் மிகுந்த ஆதாயத்தை" நடைமுறையில் 'துளிர்விட்டு' சுதந்தரிக்கிறவர்கள்! (1தீமோ.6:6).*

"

**துளிர்விட்டு வளரும் அவர்களின் விசுவாச வளர்ச்சியில், அவர்களின் குறைவான திராட்சரசம், பிரமிப்பூட்டும் ருசியான ரசமாய் மாறும் விந்தையும்... 'குறைவான' அப்பமும் மீனும், எல்லோரும் சாப்பிட்டு திருப்தியாகும் அற்புதமும், அன்று இயேசுவுக்கு நிகழ்ந்ததற்கு ஒப்பாகவே, தங்களுக்கும் சம்பவிப்பதை அனுபவித்து, பூரிப்படைவார்கள்!**

இப்பூமியில், நம்மைப்போலவே பாடுகள் அனுபவித்து, வாழ்ந்த நம் **சிலுவைநாதனின் "வறண்ட நிலம்"** உங்களுக்குத் தெரியுமல்லவா? (ஏசாயா 53:2).... "அழகில்லாதவர்! அசட்டை செய்யப்பட்டவர்! புறக்கணிக்கப்பட்டவர்! கொஞ்சமாயல்ல, துக்கத்தால் நிறைந்தவர்! தேவன்தான் இவரைத் தண்டித்து சிறுமைப்படுத்துகிறார் என பிறரால் எண்ணப்பட்டவர்! நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டவர்! நியாயம் பறிக்கப்பட்டவர்!" இவ்வாறு, அவர் கடந்து வந்த 'வறண்ட நிலத்தை' நம் ஜீவிய வறண்ட நிலத்திற்கு ஒப்பிடும்போது, நாம் எதிர்கொண்டதெல்லாம் "லேசான உபத்திரவம்" என்பது உங்களுக்குப் புரிந்துவிடும்! அத்தனை வறண்ட தன் வாழ்வின் நிலத்தில், **கெம்பீரமாய் வேர்விட்டு,** பச்சை பசேலென இளங்கிளையாய் துளிர்விட்டு வளர்ந்து, ஆவிக்குரிய நிறைவான கனிகள் அனைத்தும் செழித்தோங்க நின்றார்! 'தாவீதின் சந்ததியிலிருந்து' வந்த நம் ஆண்டவரின் அதே அடிச்சுவட்டில், நாம் அனைவரும் விழிப்புடன் நடந்து, நாமும் 'கிறிஸ்துவின் சந்ததியாய்' இந்த ஆவிக்குரிய இனிய ஜீவியமும், ஊழியமும் வாழ்ந்து, தொடர்வோமாக!

*- T.ரத்தினகுமார்*



## 'கிறிஸ்துவை அறிவிப்பதே' என் முதல்பிரதானம்! என மகிழ்ந்த மருத்துவர்!

# நெல்சன் பெல் (USA)

அமெரிக்காவின் 'வெர்ஜீனியாவில்' 1894-ம் ஆண்டு பிறந்தவர் நெல்சன் பெல். தன் 11-வது வயதில் கிறிஸ்துவுக்கு தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார். தன் வாலிபத்தில் அவருடைய நண்பர் ஒருவர் "நீங்கள் ஒரு மருத்துவ மிஷனெரியாக மாறக்கூடாதா?" எனக்கேட்ட கேள்வி கர்த்தரின் குரலாகக் கண்டு மருத்துவப் படிப்பை சிறப்பாய் படித்து முடித்தார். 1916-ம் ஆண்டு தன் மனைவியோடு சீன தேசத்துக்கு மிஷனெரியாக புறப்பட்டு சென்ற நெல்சன் "அன்பான கருணை மருத்துவமனையில்" மக்களுக்கு மருத்துவ சேவை செய்தார். எளிய மக்கள்மீது அவர் கொண்டிருந்த மனதுருக்கமான சேவைக்காக, ஜனங்கள் அவரை "ஐ ஹுவா" என அழைத்தனர். அதன் பொருள் என்னவெனில் "சீன மக்களை அன்புடன் நேசித்தவர்" என்பதாகும்.

தன் மருத்து சேவையைவிட, ஜனங்களை கிறிஸ்துவண்டை சேர்ப்பதற்கே முதல் ஆர்வமாய் கொண்டிருந்தார். 1941-ம் ஆண்டு அமெரிக்காவுக்கு திரும்பினார். அன்றுள்ள கிறிஸ்தவ பத்திரிக்கைகளில் (Christianity today) "தன் இஷ்டப்படி கிறிஸ்தவர்கள் வாழ்வதற்கு தாராளமயப்படுத்திய" போதகத்தை அடியோடு வெறுத்து, உத்தம கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஜனங்களும், ஊழியர்களும் திரும்பும்படி, கண்டித்து செய்திகள் எழுதினார். தேசத்தின் பல இடங்களில் மருத்துவமனை ஏற்படுத்திய அவரை ஜனங்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் " எங்களுக்கு மருந்துகள் மாத்திரமா கொடுத்தார்? இயேசுவின் அன்பு சுவிசேஷத்தை கரிசனையுடன் போதித்தவர் அல்லவா?" என ஜனங்கள் நன்றியுடன் கூறினார்கள். அவருக்கு நான்குமுறை மாரடைப்பு ஏற்பட்டாலும் "தெய்வ அன்பின் சேவைக்காக" நீடித்து வாழ்ந்தார். தன் மகிழ்ச்சிக்கு பிரதான காரணமாய் அவர் கூறியது என்னவெனில்: "நான் தேவனோடு கொண்டிருந்த தினசரி தியான நேரமே" என் பெலனாய் இருந்ததை கண்டேன்! எனக்கூறினார்.

தன் மருத்துவ பணியில் முதல்தரமான மருத்துவராய் போற்றப்பட்ட அவரோ, என் முதல் முக்கியமெல்லாம் 'ஜனங்கள் சுவிசேஷத்தை கண்டடைய வேண்டும்' என்ற விருப்பமேயாகும், எனக்கூறினார். அவருடைய பிரியமான மகளாகிய ரூத் தன் தந்தையின் மிஷனெரி தளமாகிய சீனாவில் பிறந்து வளர்ந்து, உத்தம தேவதாசன் பில்லிகிரஹாம் அவர்களின் துணைவியானார். ரூத் மூலமாய், பலமுறை பில்லிகிரஹாம் சீன தேசத்துக்கு வந்து ஊழியம் செய்யும் வாய்ப்பைப் பெற்றார். நெல்சன் பெல் மருத்துவமனைகளில் செய்த ஊழியத்தின் இரகசியத்தை குறித்து மருத்துவமனை ஊழியர்கள் கூறும்போது "அவர் மருத்துவம் மாத்திரமா செய்தார்? எங்கள் மருத்துவமனையில் தெய்வ அன்பையே வைத்துச் சென்றுவிட்டார்" எனக்கூறி மகிழ்ந்தார்கள்.

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## ‘நம்பிக்கை இழந்தோரை’ வாழ்வளிக்கும் இயேசுவிடம் வந்திடு!

குருடர்கள் வாசிக்க உதவும் “பிரைய்லி கல்வியை” (Braille System) கண்டுபிடித்தவர் Dr. மூன் அவர்கள்! இருப்பினும், அவர் பிறக்கும்போதே குருடராய் பிறக்கவில்லை. ஆம், ஓர் வாலிபனாய் இருந்தபோதுதான் தன் இரு கண்பார்வையை இழந்தார். “இப்படி அசம்பாவிதம் நடந்து விட்டதே” என அவர் ஒருபோதும் தேவனிடத்தில் கேள்வி கேட்டதேயில்லை. இந்த உலகமே சூனியமாகி இருண்டுபோன நிலையில், யாதொரு முறுமுறுப்பும் அவரிடத்தில் காணப்பட்டதேயில்லை. “ஆண்டவரே, நான் குருடாய் இருப்பதற்காகவும், உம்மை நான் ஸ்தோத்தரிக்கிறேன்!” என்றே அவர் தேவனிடம் ஜெபித்தார். தனக்கு கண்பார்வை மீண்டும் வரவேண்டும் என அவர் ஆரம்பத்தில் ஜெபித்தது உண்மைதான்! ஆனால் “இனி பார்வை கிடைக்காது” என்பதை உறுதியாய் அறிந்தவுடன், தேவனை நோக்கி “ஆண்டவரே, எனக்குள்ள தாலந்துகளை பயன்படுத்தி உம்மை மகிமைப்படுத்த எனக்கு அருள்புரியும்!” என்றே ஊக்கமாய் ஜெபித்தார்.

Dr.மூன் ஜெபத்தை தேவன் கேட்டார்! கண்பார்வை இழந்த குருடர்களுக்கு கல்வி கற்பதற்கு உதவும் “பிரைய்லி கல்வியை” (Braille System) கண்டுபிடிக்க தேவன் அவருக்கு உதவினார். அதன் மூலமாய், பார்வை இழந்த இலட்சக்கணக்கான பேர்கள் ‘பிரைய்லி’ மூலமாய் வாசித்து பயனடைந்து வருகிறார்கள்! வேதப்புத்தகமும் ‘பிரைய்லி’ மூலம் தயார் செய்யப்பட்டு, ஆயிரம் ஆயிரம் பார்வையிழந்த கிறிஸ்தவர்கள் பயனடைந்து வருகின்றனர். “எனக்கு ஏன் இந்த துயரம்!” என மனவேதனைப்படும் வாலிபனே, ‘மூன்’ பெற்ற அதே நம்பிக்கையை, ஆண்டவர் உனக்கும் தர விரும்புகிறார்! தேவனால் கூடாதது ஒன்றுமில்லை! ‘கோணலான’ ஜீவியத்தையும் நேராகச் செய்திட தேவனால் முடியும்! உன் கொடிய பாவ வாழ்க்கையை மன்னித்து, புதிதான வாழ்வைப் பெற்றிட, நம்பிக்கையுடன் இயேசுவிடம் வா! நீ வாழ்வு பெறுவாய்!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப
QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship
@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**